[திரு. இ. பெரியசாமி] [2018 ஜூலை 3

நிதியிலிருந்து நான் 9 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறேன். தயவுசெய்து, ரெட்டியார்சத்திரத்திற்கு முழுமையாக தண்ணீர் கொடுப்பதற்கான வழிவகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதையும், இப்பணிகளை எப்போது செய்து முடிப்பார்கள் என்பதையும் நான் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து கிளைத் திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், ரெட்டியார்சத்திரத்திலுள்ள 201 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க 8 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. கவன ஈர்ப்பு

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதியில் அரசு வேளாண்மைக் கல்லூரி தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

***திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதியில் அரசு வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம்”

2018 ஜுலை 3] [*திரு. துரை. சந்திரசேகரன்*]

குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவன ஈர்ப்பு குறித்து விரிவான விவர அறிக்கை பேரவை உறுப்பினர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 14 உறுப்புக் கல்லூரிகளும், 27 இணைப்புக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகளில் தேவையான அளவு இடங்கள் ஒதுக்கப்பட்டு அனைத்து மாவட்ட மாணவர்களும் படித்து வருகின்றனர்.

புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்க குறைந்தது 110 ஏக்கர் விவசாய நிலம் ஒரு பட்டப்படிப்பிற்குத் தேவைப்படுகிறது. கூடுதலாக ஒவ்வொரு பட்டப்படிப்பிற்கும் 110 ஏக்கர் நிலம் தேவைப்படும். வேளாண்மைக் கல்லூரி நிறுவ உத்தேசித்து உள்ள இடத்தின் மதிப்பினைப் பொறுத்து நிதித் தேவை மாறுபடும். மேலும், ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் அமைச்சுப் பணிகளுக்குத் தேவையான மனித ஆற்றல், கல்லூரி மற்றும் பண்ணையின் அளவினைப் பொறுத்து மாறுபடும்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதிக்கு அருகில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் ஈச்சங்கோட்டையில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டில், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மகளிருக்கான தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் குமுளூரில் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியன செயல்பட்டு வருகின்றன.

மேலும், பூதலூர் தாலுகா, உசிலம்பட்டி, பாளையப்பட்டி தெற்கு கிராமத்தில், தனியார் கல்லூரியான ஆர்.வி.எஸ்.

வேளாண்மைக் கல்லூரி செயல்பட்டு வருகின்றது. தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி மாணவர்கள் இக்கல்லூரிகளைத் தேர்வு செய்து பயன்பெறலாம். தஞ்சாவூரில் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையமும், ஆடுதுறையில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, விவசாயிகள் தங்கள் பயிர் சார்ந்த ஆலோசனைகளை மேற்கூறிய கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் பெறலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை எல்லாம் உண்மைதான். ஆனால், தனியார் கல்லூரிகளிலும் அந்தத் தொகுதியிலுள்ள மாணவர்கள் சேர்ந்து படிக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் தகவலுக்காகச் சொல்கிறேன். சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும், திருவையாறு தொகுதியைச் சார்ந்த ஒரு மாணவர்கூட அதில் சேரவில்லை; சேர்க்கப்படவில்லை என்பது உண்மை. நான், ஏன் இந்த கவன ஈர்ப்பைக் கொண்டு வந்திருக்கிறேன் என்றால், அந்தப் பகுதி, இறைவை பாசனப் பயிர்களான நெல், வாழை, கரும்பு, வெற்றிலைக்கொடிக்கால், தென்னை உட்பட காய்கறி பயிர்களும் அதிகமாக பயிரிடப்படுகின்ற திருவையாறு காவேரி டெல்டா பகுதியாகும். அங்கு இன்னொரு வேளாண்மைக் கல்லூரி அமைப்பதில் தவறு ஒன்றுமில்லை. அதை, அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். அப்படி இல்லையென்றால் மத்திய அரசின் நிதியுதவியோடு இயங்குகின்ற KVK, அதாவது, Krishi Vigyan Kendra என்ற ஆராய்ச்சி மையத்திற்கு முழுக்க, முழுக்க மத்திய அரசாங்கத்திலிருந்து ஏராளமான நிதி வழங்கப்படுகிறது. தமிழக அரசு இடம்தான் தர வேண்டும். அதையாவது அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்லைக்கழகத்தின்கீழ், 14 உறுப்புக் கல்லூரிகளும், 27 இணைப்புக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகளில்,

2018 ஜூலை 3] [திரு. இரா. துரைக்கண்ணு]

தேவையான அளவு இடங்கள் ஒதுக்கப்பட்டு, அனைத்து மாவட்ட மாணவர்களும் படித்து வருகின்றனர். புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்க குறைந்தது 110 ஏக்கர் விவசாய நிலம் ஒரு பட்டப்படிப்பிற்குத் தேவைப்படுகிறது. கூடுதலாக ஒவ்வொரு பட்டப்படிப்பிற்கும் அதிகப்படியாக 110 ஏக்கர் நிலம் தேவைப்படும். வேளாண்மைக் கல்லூரி நிறுவ உத்தேசித்து உள்ள இடத்தின் மதிப்பினைப் பொறுத்து நிதித் தேவை மாறுபடும். மேலும், ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் அமைச்சுப் பணிகளுக்குத் தேவையான மனித ஆற்றல், கல்லூரி மற்றும் பண்ணையின் அளவினைப் பொறுத்து மாறுபடும்.

நண்பகல் 12-00

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் ஈச்சங்கோட்டையில் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் விரிவாக்கப்பட்டு, இன்றைக்கு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. மேலும், திருவையாறிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் தஞ்சாவூரில் மத்திய பயிர் பதப்படுத்துதல் தொழில்நுட்பக் கல்லூரியும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டில் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், மகளிருக்கான தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் மற்றும் குன்னூரில் அரசு வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதிக்குட்பட்ட பூதலூர் தாலுகா, உசிலம்பட்டி, பாளையப்பட்டி தெற்கு கிராமத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரியான ஆர்.வி.எஸ். வேளாண்மைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதிக்குட்பட்ட மாணவர்கள் மேற்கண்ட கல்லூரிகளில் தங்கள் விருப்பத்திற்கிணங்க தேர்வு செய்து பயன்பெறலாம். மேலும், தஞ்சாவூரில் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையமும், ஆடுதுறையில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, விவசாயிகள் தங்கள் பயிர் சார்ந்த ஆலோசனைகளை மேற்கூறிய கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையை மீண்டும் சுட்டிக்காட்டுகிறார்கள். அங்கே K.V.K. தொடங்கப்படுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. இன்றைக்கு விவசாயிகள் மத்தியிலே, குறிப்பாக நகர்ப்புறங்களிலே எல்லோரும் organic உணவைப் பயன்படுத்துகின்ற, காய்கறிகளைப் பயன்படுத்துகின்ற நிலைக்கு மாறியிருக்கிறார்கள். பெரும்பாலும் கேன்சர் வருகிறது என்று பயந்துகொண்டு, பூச்சி மருந்து அடிக்காத காய்கறிகள், அரிசி போன்றவற்றைப் பயன்படுத்துகிறார்கள். அதைத்தான் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் அவர்கள் வலியுறுத்திக் குறிப்பிட்டார்கள். அவர் திருக்காட்டுப்பள்ளி பகுதியிலே இளங்காட்டில் பிறந்தவர். எங்களுடைய தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் திருச்சியில் 2 வேளாண்மைக் கல்லூரிகள் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் நேரு அவர்களின் முயற்சியால் அமைக்கப்பட்டன. உங்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்தவர் ஈச்சங்கோட்டையில் ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்கியிருக்கிறார்; அதை மறுக்கவில்லை. ஆகவே, குறைந்தபட்சம் வேளாண்மைக் கல்லூரி அமைக்க முடியவில்லை என்றாலும், அதிக மானாவாரி பயிர்கள் மற்றும் இறைவைப் பயிர்கள் பயிரிடப்படுகின்ற அந்தப் பகுதியில் இயற்கை வேளாண்மையை ஊக்கப்படுத்துகின்ற வகையில் organic farming என்ற முறையில் வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பெயரில் அங்கக வேளாண்மை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கக வேளாண்மை மையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் தேவையென்றால்*

2018 ஜூலை 3] [திரு. இரா. துரைக்கண்ணு]

அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் சொல்லி அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம், நீடாமங்கலத்திலே ஒரு K.V.K. செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் வரைமுறைப்படி, ஒரு மாவட்டத்திற்கு ஒரு K.V.K.-தான் அமைக்க முடியும். இப்போது ஈச்சங்கோட்டையில் ஒரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், தஞ்சாவூரில் மத்திய பயிர் பதப்படுத்துதல் தொழில்நுட்ப நிறுவனம் இந்திய அரசின் கட்டுப்பாட்டிலும், பாளையப்பட்டி, திருவாரூரில் ஆர்.வி. சிவகாமி கல்லூரியும் இருக்கின்றன. ஆகவே, தேவையான அளவிற்கு அங்கே கல்லூரிகள் இருப்பதனால் இப்போது புதிதாக ஒரு கல்லூரி தொடங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. பரவாயில்லை. (குறுக்கீடு) திரு. துரை. சந்திரசேகரன், உட்காருங்கள்.

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2018 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 44 முதல் 57 வரையிலான 14 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ரவி, குழுவின் அறிக்கையைப் படியுங்கள்.*